**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

Sessions Case No. : 19/2022

: Prosecution - **PW-14**

Deposition of witness for : Defense

Name : முனைவர் திருமதி.M.உஷாராணி Father's Name :

Village : Taluk :

Caste : Calling :

Religion : Age :

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 23rd day of July 2024.

(1ம் எதிரி கனகராஜ், 2ம் எதிரி சந்தோஷ்குமார், 3ம் எதிரி பிரகாஷ், 4ம் எதிரி அழகுலெட்சுமி (அம்மு), 5ம் எதிரி ஜெயலலிதா ஆகிய 1 முதல் 5 எதிரிகள் முன்னிலையாகியுள்ளனர்).

அ.சா.14 சாட்சி சென்னை, தடய அறிவியல் துறையில் அறிவியல் அலுவலராக பணிபுரிந்து வருவதால், சென்னையிலிருந்து கரூருக்கு வந்து செல்லும் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு, சாட்சியை காணொலி மூலமாக விசாரணை செய்வதற்கு இந்நீதிமன்றம் Crl.M.P.No.737/2024ல் 03.07.2024 தேதியில் பிறப்பித்த உத்தரவை தொடர்ந்து, அ.சா.14 முனைவர் திருமதி.M.உஷாராணி, சென்னை மாநகர உரிமையியல் காணொலி அரங்கில் முன்னிலையாகியுள்ளார். சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்ற காணொலி அரங்கில் உள்ள அ.சா.14 இந்நீதிமன்றத்தில் காணொலி மூலம் காணொலி திரையில் இணைக்கப்பட்டுள்ளார். சாட்சி அமர்ந்துள்ள சென்னை, மாநகர உரிமையியல் நீதிமன்ற காணொலி அரங்கில் அவர் அருகில் வேறு யாரும்

இல்லை என்று நீதிமன்ற Assistant Programmer செல்வி.விசாலாட்சி, என்பவர் மூலம் உறுதி செய்யப்பட்டு சாட்சி இந்நீதிமன்ற இருக்கை எழுத்தர் நிலை-I திரு.M.A.வீரக்குமார் அவர்கள் மூலமாக சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னை தடய அறிவியல் துறையில், மரபணு பிரிவில் அறிவியல் அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 24.09.2020 அன்று இதே துறையில் இதே பிரிவில், இதே பணியிலிருந்தபோது, கரூர் மாவட்டம், பசுபதிபாளையம் கா.நி.கு.எண். 82/2018 வழக்கில் சம்மந்தப்பட்ட தொடை எலும்பு ஒன்று பிரேத பரிசோதனையின்போது சேகரிக்கப்பட்டு, காவலர் 1780 திரு.பாலசுப்பிரமணியன் என்பவர் மூலமாக எங்கள் அலுவலகத்தில் மூடி முத்திரையிட்டு பகுப்பாய்வுக்காக பெறப்பட்டது. மேற்சொன்ன தொடை எலும்பிலிருந்து DNA பிரித்தெடுக்கப்பட்டு, 15 STR குறியிடங்களில் PCR Amplified STR செய்முறை மூலம் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்சொன்ன தொடை எலும்புக்குரிய ஆய்வறிக்கை எண். DNA/289/2020 இலக்கமிடப்பட்டு ஆய்வு செய்யப்பட்டது. அந்த ஆய்வின் தொடர்ச்சியாக, கரூர், நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களின் கடித எண். 1032/2021, நாள். 04.08.2021 தேதியிட்ட கடிதம் மூலம் இறந்துபோனதாக கருதப்பட்டு, சுப்புராஜ் என்பவரது தாயார் எல்லம்மாள் என்பவரின் ஒப்புக்கொள்ளப்பட்ட இரத்தமாதிரி, இரத்தம் சேகரிக்கும் தாளில் பெறப்பட்டு, 05.08.2021 அன்று தலைமைக்காவலர் 1831 திரு.சரவணன் என்பவர் மூலம் DNA ஆய்வகத்தில் பெறப்பட்டது. இரத்தமாதிரியிலிருந்து மேற்படி செய்முறை மூலம் DNA பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு, அவை வழக்கு பொருட்களான தொடை எலும்பின் DNA படிவத்துடன் ஒப்பீடு செய்யப்பட்டது. எலும்பு மற்றும் இரத்தமாதிரி DNA அறிக்கையும், அதன் ஒட்டுமொத்த கருத்து விளக்கமும், இணைப்பு 1 முதல் 3

வரை இணைக்கப்பட்டுள்ளது. பொதுவாக, ஒரு குழந்தைக்கு ஒரு STR குறியிடத்தில் காணப்படும் இரண்டு அல்லீல்களில் ஒன்று உயிரியல் தாயிடமிருந்து பெறப்படும். மற்றொன்று உயிரியல் தந்தையிடமிருந்து பெறப்படும். இணைப்பு 3ல் காணப்படும் DNA ஆய்வறிக்கை படி, தொடை எலும்புக்குரிய நபரின் 15 STR குறியிடங்களில் காணப்படும் இரண்டு அல்லீல்களில் ஒன்று தாய் என்று ஒப்புக்கொள்ளப்பட்ட எல்லம்மாள் அவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது. எனவே, எல்லம்மாள் என்பவர்தான் தொடை எலும்புக்குரிய நபரின் உயிரியல் தாய் ஆவார் என ஆய்வின் மூலம் தீர்மானித்து, அதற்குரிய ஒட்டுமொத்த சாத்தியக்கூறு 99.99999% என கணக்கிடப்பட்டது. எல்லம்மாள் தவிர வேறு எந்த நபரும் அந்த தொடை எலும்புக்குரிய நபரின் உயிரியல் தாய் இல்லை என தீர்மானித்து, அதற்குரிய சாத்தியக்கூறு 99.9999999999999% என கணக்கிடப்பட்டது.

முடிவு :- மேற்கூறிய DNA ஆய்விலிருந்து தொடை எலும்பு ஒரு ஆணின் உடையது என்றும், எல்லம்மாள் என்பவர்தான் அந்த தொடை எலும்புக்குரிய நபரின் உயிரியல் தாய் ஆவார் என்று உறுதி செய்யப்பட்டு, DNA/339/2021, நாள். 08.09.2021 என இலக்கமிடப்பட்டு, நீதித்துறை நடுவர் எண்.1 கரூர் நீதிமன்றத்திற்கு, திரு.கந்தசாமி, முதல்நிலைக்காவலர் 1833 என்பவர் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. அந்த அறிக்கையில், அறிவியல் அலுவலரான நானும் கையெழுத்திட்டுள்ளேன். அந்த DNA அறிக்கை நீ.ம.சா.ஆ.2.

<u>குறுக்கு விசாரணை</u>

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்தார்.

ஒம்/-ஆர்.சண்முகசுந்தரம்
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.